புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | நவம்பர் 24, 2022 | புரட்சி 21 | முழக்கம் 45 | விலை: ரூ.3.00


# ஆர்.எஸ்.எஸ் ஓர் அபாயம் உள்ளிட்ட மூன்று நூல்களை வெளியிட்டு ஆ.இராசா முழக்கம்

# ஆரிய திராவிடப் போராட்டம் தொடர்கிறது



கருஞ்சட்டைப் பதிப்பகம் சார்பில், மூன்று நூல்கள் வெளியீட்டு நிகழ்வு 19.11.2022 அன்று மாலை 6 மணியளவில், தேனாம்பேட்டை அன்பகத்தில் நடை பெற்றது.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய ‘ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயம்’ கவிஞர் பிரபஞ்சன் எழுதிய “ஈரோடு தமிழர் உயிரோடு”, கவிஞர் நா.காமராசு எழுதிய , ‘ஒரு குயிலின் போர்ப் பாட்டு’ ஆகிய நூல்கள் மறு பதிப்பு செய்து வெளியிடப்பட்டது.

மருத்துவர் தாயப்பன், வழக்கறிஞர் அஜிதா, மு.செந்திலதிபன் (மதிமுக) ஆகியோர் நூல்களை திறனாய்வு செய்து உரையாற்றினர். நிறைவாக திமுக துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா சிறப்புரை யாற்றினார்.

கருஞ்சட்டைப் பதிப்பகம் இயக்குனர் பெல். இராசன் நிகழ்விற்கு தலைமையேற்று நிகழ்வை ஒருங்கிணைத்தார். சிறப்புரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. இராசா உரையில் -

“ஆரிய திராவிடப் போராட்டம் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. அந்தப் போராட்டத்திற்கு வலிமை சேர்க்கும் கருத்தாயுதங்களாக இந்த ஆர்.எஸ்.எஸ் ஓர் அபாயம் உள்ளிட்ட முன்று நூல்களும் பயன்படும் என்பதற்காக கருஞ்சட்டைப் பதிப்பகம் இதை வெளிக் கொண்டு வந்திருக்கிறது. இந்த நூல்களை 40 ஆண்டுகளுக்கு முன்னால் நாங்கள் சரித்திரங்களாகப் படித்து கடந்து வந்தவர்கள். திராவிடர் கழக பயிற்சி முகாமில் இவைகளெல்லாம் எங்களுக்கு கற்பிக்கப்பட்டன. அன்றைக்கு எதிரிகள் நேர்மையானவர்களாக இருந்தனர்.

1962இல் அண்ணா, ‘நான் திராவிட மரபினத்தைச் சேர்ந்தவன்’ என்று மாநிலங்களவையில் பேசிய போது, அதை எதிர்த்துப் பேசுவதற்கு ஒரு ஜன சங்கத்துகாரருக்குக் கூட யோக்கியதை இல்லை. ஆனால் இன்றைக்கு மூளை இல்லாதவர்களெல்லாம் ராஜ்பவனில் உட்கார்ந்து கொண்டு திராவிடம் என்ற ஒன்றே இல்லை என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆதி சங்கரரே ‘திராவிட சிசு’ என்று கூறினார். அவர்கள் சொன்னால் திராவிடத்தை ஒப்புக் கொள்வார்கள், நாம் கூறினால் திராவிடத்தை எதிர்ப்பார்கள்.

இந்திய ஒருமைப்பாட்டுக் குழுவின் தலைவராக, நேருவால் நியமிக்கப்பட்ட சர்.சி.பி. இராமசாமி அய்யர் தன்னுடைய பட்டமளிப்பு விழா உரையில், ‘இந்தியாவில் இரண்டு பண்பாடுகள் உண்டு, ஒன்று சமஸ்கிருதப் பண்பாடு மற்றொன்று தமிழ் பண்பாடு’ என்று தெளிவாக அவர் வேறுபடுத்திக் கூறியிருக்கிறார். இந்த வரலாறு தெரியாதவர்களெல்லாம் இன்றைக்கு ஆளுநர்களாக வந்து விட்டார்கள்” என்று குறிப்பிட்டுப் பேசினார்.

அவரது முழு உரை பின்னர் வெளிவரும்.

### ‘ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயம்’ – 10,000 பிரதிகளை ஆ. இராசா பெற்றுக் கொண்டார்

‘ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயம்’ நூலை மலிவு விலையில் கொண்டு வந்தால் மக்களிடம் பரப்புவதற்கு எளிதாக இருக்கும் என்று நூலை திறனாய்வு செய்த வழக்கறிஞர் அஜிதா குறிப்பிட்டார். தொடர்ந்து கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் இயக்குனர் பெல். இராசன், “குறைந்தது 10000 புத்தகத்திற்கான செலவை ஏற்றுக் கொண்டால் நிச்சயம் கொண்டு வருவோம்” என்றார். சிறப்புரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, “பெரம்பலூர் மாவட்ட திமுக சார்பில் 10,000 நூல்களுக்கான செலவை ஏற்றுக் கொள்கிறோம்” என்று பலத்த கரவொலிக்கிடையில் அறிவித்தார்.

# தமிழை மதமாக்கி, தமிழரை ஆரியத்துக்குள் திணிக்கும் முயற்சியே காசி தமிழ்ச் சங்கமம்

## ம.கி.எட்வின் பிரபாகரன்

75ஆவது சுதந்திர தினத்தை நினைவு கூர்ந்து கொண்டாடுவதற்காக, “விடுதலையின் அமுதப் பெருவிழா” என்கிற பெயரில் தொடர் நிகழ்வுகளை ஒன்றிய அரசு ஒருங்கிணைத்து நடத்தி வருவது, நாம் அறிந்ததே! அதன் ஒரு பகுதியாக “ஒரே பாரதம் உன்னத பாரதம்” என்பதை வலியுறுத்தும் விதமாக, “காசி தமிழ் சங்கமம்” என்கிற பெயரில், ஒரு மாத தொடர் நிகழ்வுகளை ஒன்றிய அரசு 19/11/2022இல் இருந்து நடத்த ஆரம்பித்துள்ளது.

இதன் நோக்கங்களும் தெளிவாக சென்னை அய்.அய்.டி. உருவாக்கிய இணையதளத்தில் விளக்கப்பட்டுள்ளன. வெளிப்படையாகக் கூற வேண்டும் எனில், புதிய கல்விக் கொள்கையை (2020) கலை வடிவத்தின் மூலமாக திணிப்பது முக்கிய நோக்கமாகும். இதை அவர்களே கூறியிருக்கிறார்கள். வடஇந்தியாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் ஒரு ஆன்மீக தொடர்பை ஏற்படுத்தி, அதன் மூலம் சனாதன கொள்கைகளை தமிழ்நாட்டில் தீவிரமாக புகுத்துவது இன்னொரு நோக்கமாகும். “வாஸ்து சாஸ்திரத்தை நவீன அறிவியலோடு இணைப்பது” போன்ற பல நகைச் சுவையான நோக்கங்களும் கூறப்பட்டுள்ளன. சென்னை அய்.அய்.டி.யும் பனாரஸ் இந்து பல்கலைக் கழகமும் இணைந்து இந்நிகழ்வை நடத்துகின்றன. மதச்சார்பற்ற முறையில் விஞ்ஞான மனோபாவத்தோடு நிகழ்வுகளை ஒருங்கிணைக்க வேண்டிய கல்விக் கழகங்கள், ஒரு குறிப்பிட்ட மதத்தின் நிகழ்வாக இந்நிகழ்வை ஒருங்கிணைப்பது என்பது, நாட்டின் கல்வித் துறைக்கே மானக்கேடான ஒரு காரியமாகும். இதே போல், இந்தியாவில் தோன்றிய பிற மதங்களான,

புத்த மதத்தைப் பற்றியோ, சீக்கிய மதத்தை பற்றியோ இத்தகு நிகழ்ச்சிகளை நடத்த இந்நிறுவனங்கள் என்றேனும் திட்டமிட்டுள்ளார்களா? இல்லை என்பதே பதிலாகும்.

இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்காக தமிழ் நாட்டில் இருந்து நிறைய ஆராய்ச்சியாளர்களும் கல்வியாளர்களும் மாணவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்களுள் கணிசமானோர் வலதுசாரிகளாக இருக்கின்ற போதிலும், மீதமிருக்கும் ஆற்றலாளர்களையும் வலதுசாரி கொள்கையின்பால் ஈர்ப்பதற்கும், இந்த ஒரு மாத “காசி தமிழ் சங்கமம்” பயன்படப் போகிறது. தமிழ்நாடு திரும்புபவர்களில் பெரும்பாலானோர் சங்கிகளாகவே மாறி, இங்கு வரும் வாய்ப்புள்ளது.

இதற்கென தனியாக ஒரு இணையதளமும், பேஸ்புக் டுவிட்டர், இன்ஸ்டாகிராம் பக்கங்களும் உருவாக்கப் பட்டு, வலதுசாரி கருத்துக்கள் பரப்பப் படுகின்றன. கல்விப் பணியை செய்வது அய்.அய்.டி.யின் வேலையா? அல்லது ஆன்மீகப் பணியை செய்வது அய்.அய்.டி.யின் வேலையா? என்கிற கேள்வி எழுகிறது. நம்முடைய வரிப்பணம் இவ்வாறாகவெல்லாம் வீணாகுவதா? என்ற ஆதங்கமும் நமக்கு இருக்கின்றது. ஆரியக் கலாச்சாரத்தை தமிழர் கலாச்சாரமாக உலக அரங்கில் பறைசாற்று வதற்கும், இச்சங்கமத்தை பாஜக பயன்படுத்த நினைக்கின்றது. ஆனால் அவர்களுக்கு கிடைக்கப் போவது என்னவோ தோல்விதான். அவர்கள் நடத்தும் நிகழ்ச்சிகளுக்கு சமூக வலைத்தளங்களில் பெரிதாக வரவேற்பும் இல்லை. அவர்களால் இதுவரை எந்த அதிர்வலைகளையும் ஏற்படுத்தவும் முடியவில்லை என்பது கண்கூடாகத் தெரிகிறது. அய்.அய்.டி. உருவாக்கி இருக்கும் ஃபேஸ்புக் பக்கத்தின் முகப்புப் படத்தைக்கூட, ஒருவர்கூட இதுவரை Like செய்யாத அளவுக்கு, காத்து வாங்குகிறது. இசையில் மட்டும் ஞானியான இளையராஜாவை வைத்து பஜனை பாடியும் ஒன்றும் தேறவில்லை.

இவர்கள் முன்வைக்கும் “ஒரே பாரதம், உன்னத பாரதம்” என்ற முழக்கத்திற்கு வரலாற்று ரீதியாக ஏதேனும் அர்த்தம் உள்ளதா? பாரதம் என்ற பெயரில் ஒரு துணைக்கண்டமே, ஒரே நாடாக இருந்ததற்கு வரலாற்றுச் சான்றுகள் தான் உண்டா? எதுவுமே கிடையாது. கிமு ஒன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த மிகப்பழமையான “ஹதிகும்பா கல்வெட்டில்”, “பாரத வர்ஷா” என்பது மகத நாட்டுக்கு மேற்கே, கங்கை கரையில் அமைந்திருந்த, ஒரு சிறிய பகுதியாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. புராணங்களில் கூறப்பட்டுள்ள பாரதப் பெயர் சார்ந்த கட்டுக் கதைகள் எல்லாம், உலக அரங்கில் எடுபடாது.

ராமர் கோயிலை வைத்து அரசியல் செய்ய பார்த்தார்கள் (அதுவும் தமிழ்நாட்டில்); எந்த பயனும் அவர்களுக்கு கிட்டவில்லை. ராமர் பாலத்தை வைத்து முயன்று பார்த்தார்கள்; நினைத்தது எதுவுமே நடக்கவில்லை. வைணவத்தை கையில் எடுப்பதால் தான் வெற்றி பெற முடியவில்லையோ என்று யோசித்தார்கள். தமிழர்கள் அதிகம் வழிபடும் கடவுள் முருகனாயிற்றே! முருகனை வைத்து முயற்சி செய்து பார்க்கலாமே! என்று வேல் எடுத்து ஆடினார்கள்; டெபாசிட் தொகை கூட கிடைக்கவில்லை. இப்போது, தமிழ்நாட்டில் சைவர்கள் பெரும்பான்மை என்பதால், சிவனை கையில் எடுத்து காசிக்கும் ராமேஸ்வரத்துக்கும் இணைப்பை உருவாக்கி, தமிழ்நாட்டில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றலாம் என்று பகல் கனவு காண்கிறார்கள்.

“காசி தமிழ் சங்கமம்” நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாட்டில் இருந்து சென்ற மாணவர்கள் அனைவருக்கும் காவித் துண்டு வழங்கப்பட்டுள்ளது. பாரதியார் காசியில் இரண்டு ஆண்டுகள் தங்கி இருந்த போது தான் மீசையை முறுக்க ஆரம்பித்தார் என்கிறார் பிரதமர். இதனால் காசிக்குப் பெருமை என்றால் வெள்ளையர்களுக்கு பயந்து பாரதியார் புதுச்சேரியில் பதுங்கி இருந்ததும் புதுச்சேரிக்கு பெருமை தானே! பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் பாரதியார் பெயரில் தமிழ் இருக்கை அமைக்கப்படும் என்று கடந்த 2021ஆம் ஆண்டே மோடி அறிவித்தார்; இப்போது காசி தமிழ் சங்கமத்தில் மீண்டும் இதனை அறிவித்துள்ளார். அடுத்த ஆண்டு மீண்டும் இதையே அறிவிப்பார்; நடைமுறைக்கு வருமா என்பது தெரியாது. இந்த வெற்று அறிவிப்பையே பெருமைக்குரிய விஷயமாக தமிழக பாஜகவினர் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

தமிழ் மொழியை 130 கோடி இந்தியர்களும் காப்பாற்ற வேண்டும் என்கிறார் பிரதமர். யாரிடமிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதை சொல்ல மறந்து விட்டார். 2014இல் இருந்து இந்த நாட்டின் பிரதமராக இருக்கும் மோடி, எட்டாவது அட்டவணையில் இருக்கக்கூடிய 22 மொழிகளையும், ஒன்றிய அரசின் அலுவல் மொழிகளாக அறிவிக்காதது ஏன்? ஒன்றிய அரசு பணிகளுக்கான தேர்வுகளை, அந்தந்த மாநில மொழிகளில் நடத்துவதற்கு, இன்றளவும் மிகப்பெரிய போராட்டங்களை நாம் நடத்த வேண்டி இருப்பது ஏன்? உதட்டளவில் பாஜகவினர் பேசும் தமிழ் மொழியுரிமை என்பதைக் கண்டு மயங்க, தமிழர்கள் அரசியல் அறிவற்றவர்கள் இல்லை. “காசி தமிழ் சங்கமம்” ஒரு மாதம் நடைபெற இருப்பதால், பல விஷமத்தனமான கருத்துக்களை இந்த தொடர் நிகழ்வுகளின் மூலமாக அவர்கள் நிச்சயமாக பரப்ப முயல்வார்கள். அவர்கள் என்னென்ன கருத்துக்களை விதைக்கிறார்கள் என்பதை கூர்ந்து கவனித்து அதற்குரிய எதிர்வினையை ஆற்றுவது நம்முடைய கடமையாகும்!

# நவம்பர் 26 சட்ட எரிப்பு நாள் சிந்தனை

நவம்பர் 26 சட்ட எரிப்பு நாள்! சாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை பெரியார் 1957 இல் இதே நாளில் எரிக்கச் சொன்னார். இந்த சட்டப் பிரிவுகள் சாதியை மட்டும் பாதுகாக்கவில்லை. பார்ப்பன மேலாண்மையையும் இன்று வரை காப்பாற்றிக் கொண்டிருக்கிறது என்பதே உண்மை; எப்படி?

- அரசமைப்புச் சட்ட விதிகள் 13, 19, 25, 26, 372(1) ஆகியவற்றில் 'பழக்கச் சட்டம்', 'வழக்கச் சட்டம்' (Customs and Usages) என்பதற்கு சட்டப் பாதுகாப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- மதச் சுதந்திரம் மற்றும் பழக்க வழக்கங்களில் எந்த சட்டமும் தலையிட முடியாது என்ற பார்ப்பனர்களுக்கான பாதுகாப்பை அரசியல் சட்டத்தில் இணைப்பதற்கு திரைமறைவில் தனது செல்வாக்கை செலுத்தி செயல்பட்டவர், பார்ப்பனர்களின் தலைவரான, இறந்துபோன காஞ்சி சீனியர் சங்கராச்சாரியான சந்திரசேகரேந்திர சரசுவதி என்பவர்தான்!
- அரசியலமைப்புச் சட்டத்தின் 26வது பிரிவு மதங்களைப் பற்றிப் பேசுகிறது. மதப் பிரச்சினைகள் எதுவானாலும் அது சட்டங்களுக்கு உட்பட்டதாகவே இருக்கும் என்றுதான் அரசியல் சட்டத்தை உருவாக்கிய அமைப்பு முடிவு செய்திருந்தது. சங்கராச்சாரி தலையீட்டில்தான் இது மாற்றப்பட்டது. மதங்கள் தொடர்பான சொத்துகளை நிர்வகிப்பதில் மட்டுமே சட்டம் கட்டுப்படுத்தும். மற்றபடி ஒவ்வொரு மதப் பிரிவும் ஒரு மதத்துக்குள்ளேயே இருக்கும் பல்வேறு பிரிவுகளும் எவ்வித சட்டக் குறுக்கீடுமின்றி செயல்படலாம் என்ற உரிமையை சட்டம் வழங்கிவிட்டது.
- பிற மதங்களைப்போல் இந்து என்ற பெயரில் ஒரே மதமில்லை. சைவம், வைணவம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கலவையாக இருப்பதால் 'ஒரே மதத்தின் கீழ் உள்ள பல்வேறு பிரிவுகள்' என்ற வாசகத்தையும் சங்கராச்சாரியே உருவாக்கி அரசியல் சட்டத்தில் சேர்க்கச் செய்துவிட்டார். இதன் விளைவுகள் என்ன?
- பார்ப்பனரல்லாத மக்கள் "சூத்திரர்கள்" அதாவது "பிராமணர்"களின் வைப்பாட்டி மக்கள், அடிமைகள் என்ற அவலத்துக்கு சட்டத்தின் பாதுகாப்பு தொடருகிறது.
- அனைத்து சாதியினரும் கோயில் கருவறைக்குள் நுழைந்து பூசை செய்ய முடியாமல் தமிழக சட்டமன்றத்தில் இரண்டு முறை தீர்மானம் நிறைவேற்றியும் செயல்படுத்த முடியாமல் உச்சநீதிமன்றத்தால் முடக்கப்பட்டுக் கிடக்கிறது. "பிராமணன்" என்ற பிறப்பு தகுதி யுள்ளவர்கள் மட்டுமே கர்ப்பகிரகத்தில் நுழைய முடியும். கடவுளுடன் "உரையாட" முடியும். கடவுளுக்கு மந்திரத்தின் மூலம் சக்தியை ஏற்ற முடியும். ஏனைய பார்ப்பனரல்லாதவர்கள் 'சூத்திரர்கள்' என்பதால் கர்ப்ப கிரகத்துக்குள் நுழைய முடியாது. அப்படி நுழைந்தால் அது 'பழக்கவழக்கத்துக்கு' எதிரானது புனிதம் பறிபோய்விடும் என்ற நிலையே இன்று வரை நீடிக்கிறது.
- மதச் சுதந்திரத்தின் அடிப்படையிலேயே பார்ப்பான் பூணூல் போட்டுக் கொண்டு தன்னை உயர் பிறப்பாளராக அறிவித்துக் கொள்கிறான். "என்னைத் தவிர, பிறர் எல்லாம் சூத்திரன்" என்று இதன் மூலம் நெஞ்சு நிமிர்த்தி அறிவித்து பவனி வருகிறான்.
- இத்தகைய தங்குதடையற்ற மதச் சுதந்திரம் சட்டத்தில் வழங்கப்பட்டிருப் பதால்தான் கோயிலில் உள்ள கடவுள் சிலைகளே சட்ட ரீதியான நபர்களாகவும், நிரந்தரமான "மைனர் களாகவும்" சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பேசும் சக்தியற்ற இந்த சிலைகள், தனக்காக, தனது காப்பாளர், அறங்காவலர், அல்லது தனது பக்தர்கள் வழியாக நீதிமன்றம் போகும் உரிமைகளைப் பெற்றிருக்கின்றன. அதே நேரத்தில் சட்டத்தால் 'மைனராக' ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த கடவுள் சிலைக்கு எதிராக சிவில் வழக்குகளையோ, அல்லது கிரிமினல் வழக்குகளையோ எவரும் தொடர முடியாது. இந்திய அரசியல் சட்டம் இந்துக் கடவுளுக்கு மட்டுமே இந்த உரிமைகளை வழங்கியிருக்கிறது. பிற மதக் கடவுளர்களுக்கு இந்த உரிமை கிடையாது.
- இந்த உரிமையின் அடிப்படையில் தான் அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடத்தில்தான் ராமன் பிறந்தான் என்று கூறி மசூதியை இடித்த வழக்கில் 'ராமன்' பெயரிலேயே (ஒரு மைனர் என்ற முறையில்) வழக்கு தொடரப்பட்டு, அந்த மனுவை நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டது.
- அலகாபாத் உயர்நீதிமன்றம் பாபர் மசூதி இருந்த இடத்தில்தான் ராமன் பிறந்தான் என்று உலகமே எள்ளி நகையாடக் கூடிய ஒரு தீர்ப்பை (செப்.30, 2010) வழங்கியது அல்லவா? அத் தீர்ப்பில் ஒரு பகுதியை சுட்டிக் காட்ட வேண்டும். ஒரு மைனராக நீதிமன்றத்துக்கு வந்துள்ள இராமன், மாற்றார் சொத்துக்குரிய இடத்துக்கு (பாபர் மசூதி) உரிமை கோர முடியுமா என்ற கேள்வி நீதிமன்றத்தில் எழுப்பப்பட்டது. அதற்கு நீதிபதி தந்த தீர்ப்பில், 'ராமன்' பிறந்த அந்த இடத்தை ஒரு அசையாத சொத்தாக பார்ப்பது தவறு. இராமன் பிறந்த இடம் என்பது பகவான் வாயுவைப்போல் பரவி நிற்கும் புனிதப் பூமி. தன்னளவிலே பகவான் அங்கே பிறந்து சக்தியாக விரவி நிற்கிறார். இதற்கான ஆதாரம் ஸ்மிருதிகளிலே (பார்ப்பனர்களின் திமிரைப் போற்றுபவை) இருக்கிறது என்று நீதிமன்றம் பதிலளித்துள்ளது. ஒரு கோயிலை இடித்து விட்டதாலோ அங்கே கடவுள் சிலை இல்லாமல் போய்விடுவதாலோ, அந்த இடம் தெய்வீகத் தன்மையை இழந்து விடவில்லை. கோயில் இருந்த அந்த இடமே, கடவுள் தன்மை பெற்றதுதான். அந்த அடிப்படையில் தனது இருப்பிடத்துக்காக 'இராமனுக்கு' வழக்காடும் உரிமை உண்டு என்று அலகாபாத் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

  எனவே, பாபர் மசூதி ஒரு நிலம் என்ற அடிப்படையில் 'சொத்து' என்றாலும் கூட, அந்த நிலமே கடவுளாகவும் இருக்கிறது. அந்த இடத்தை ராமனைத் தவிர வேறு எவரும் சொந்தம் கொண்டாட முடியாது. அரசாங்கத்துக்கே அந்த இடத்தில் கை வைக்கும் அதிகாரம்கிடையாது – என்று கூறுகிறது, அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பு.
- இப்படி இந்து கடவுள் சிலைகளை மனிதர்களாக்கி, சட்டத்தின் உரிமைகளை வழங்கி, அதே நேரத்தில் சிலைக்கு எதிராக வழக்காடும் உரிமைகளையும் மறுத்து, அரசுக்கே தலையிடக் கூடிய உரிமைகளையும் பறிக்கும் பாது காப்புகளை இந்த நாட்டின் அரசியல் சட்டப் பிரிவுகள் வழங்கியிருக்கின்றன. இங்கே 'கடவுள் சிலைகள்' என்ற பெயரில் பதுங்கி நிற்பவர்கள் பார்ப்பனர்கள் தான். ஒவ்வொரு ஆகமக் கோயில் கடவுளும் பார்ப்பான்தான். காரணம், அந்த கடவுள் சிலைகளே பார்ப்பனர்களின் மந்திரத்துக்குத்தான் கட்டுப்பட்டுள்ளது.

– எனவேதான், அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ள மதப் பாதுகாப்பு உரிமைகள் மற்றும் 'பழக்க வழக்கங்களுக்கு' வழங்கியுள்ள சட்டப் பாதுகாப்புகள் இருக்கும் வரை – பார்ப்பான் "சூத்திரன்" என்ற சட்டப்படியான இழிவு தொடர்ந்து கொண்டே இருக்கும். தீண்டாமை ஏற்றத் தாழ்வுகள் என்ற மனித விரோதக் கோட்பாடுகளை சட்டம் பாதுகாத்துக் கொண்டே இருக்கும்.

கோயில் கர்ப்பகிரகத்துக்குள் இப்போது பார்ப்பனரல்லாதாருக்கு நிலை நிறுத்தப்பட்டுள்ள "தீண்டாமை"யை தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தாலும் தடுக்க முடியாதது ஏன் என்ற கேள்வியை எழுப்பினால், பார்ப்பன கொடுங்கோன்மை சட்டத்தில் புகுந்து கொண்டிருக்கும் உண்மையைப் புரிந்து கொள்ள முடியும். பெரியார் – இந்த சட்டப் பிரிவுகளை எரிக்கச் சொன்னதன் பின்னணி இதுதான்!

'மதச் சுதந்திரம்' என்ற சட்டப் பிரிவுகள், பார்ப்பனரல்லாத மக்களை 'சூத்திரர்' என்று இழிவுபடுத்தி, 'வர்ணாஸ்ரமம்' என்ற சமூக விரோதக் கோட்பாடுகளுக்கும் நியாயம் சேர்க்கிறது. "பிராமணனை" அங்கீகரிக்கிறது; சாதியைப் பாதுகாக்கிறது. இன்றும் கோயில் கருவறையில் பார்ப்பனரல்லாதாரை 'சூத்திரன்' என்று பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

சட்ட எரிப்பு நாளில் நாம் இதை ஆழமாக சிந்திக்க வேண்டும்!

# பிரதமர் மோடி 'தமிழ் சங்கம'த்தை காசிக்கு மாற்றியது ஏன் ?

தமிழர்கள் வாழ்க்கையில் பார்ப்பனர்கள் சமஸ்கிருத சடங்குகளைப் புகுத்துவதற்கு மேற்கொண்ட சூழ்ச்சி களை ஆட்சி மொழிக் காவலர் கீ. இராமலிங்கனார் அம்பலப்படுத்துகிறார். அவரது நூலிலிருந்து:

ஒரு நானூறு ஆண்டுகளுக்கு முன் விசயநகர மன்னர், தமிழ்நாட்டில் புகுந்து ஆளத் தொடங்கினர். அவர் களுக்கு வடமொழியிற் பற்று மிகுந் திருந்ததால் தமிழ் நாட்டவர் சடங்குகள் அனைத்தையும் அம்மொழியிலேயே நிகழ்த்தினால் நல்லது என்று நம்பினர். அதனால், ஆயிரக்கணக்கான 'புரோகி தர்'களை ஆந்திர நாட்டிலிருந்து இறக்குமதி செய்து தமிழ் நாடெங்கணும் ஊருக்கு ஒருவராய்க் குடியேற விட்டனர். அவர் களுக்கு வேண்டிய வீட்டு வசதி, வாழ்க்கை வசதி களையெல்லாம் செய்துதந்து, ஒவ்வொருவருக்கும் சடங்கு செய்து வைக்கக்கூடிய எல்லைகளையும் வகுத்துத் தந்தனர்; குறிப்பிட்ட எல்லைக்குள் நிகழும் சடங்குகள் அவ்வளவையும் ஒரு புரோகிதரே நடத்தி வைக்கும் தனி உரிமையையும் வழங்கினர். இப் புரோகிதர் குடியேறிய பிறகே, தமிழர் வீட்டுச் சடங்குகள் அனைத்தும் இப் புரோகிதர்களால் வடமொழியில் நடத்தி வைக்கப் பெறலாயின.

சிலப்பதிகாரத்தில் காணப்படும் 'மாமுது பார்ப்பான்' என்பது வள்ளுவர் குறிப்பிடும் அந்தணரைக் குறிக்கும்; 'அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்' என்பது வள்ளுவர் வாய்மொழி.

முதன்முதலிற் சடங்குக்குரிய மந்திரங்களை ஆந்திரப் புரோகிதர் வடமொழியில் சொல்வதெனத் தொடங்கிய போது, தமிழ்நாட்டில் ஏற்கெனவே இருந்த வடமொழிப் பற்றாளர் அதனை எதிர்த்தனர். "நாட்டில் வேறு பகுதியிலிருந்தவர் இங்கு வந்து பிழைப்பிற்கு வளமான வழியைப் பெற்று விட்டார்களே!" என்னும் மனக்குறை அதற்குக் காரணமாயிருக்கலாம். தமிழிற்கு மாற்றாக வட மொழியில் மந்திரம் சொல்வதனை உள்ளூர விரும்பினராயினும், எதிர்ப்புப் பெருகாமலில்லை. புரோகிதர் நாயக்க மன்னருடன் கலந்து பேசினர். அவர்களுக்கு வாய்ப்பான முடிவு ஒன்று தோன்றியது. "வடமொழி மந்திரங்களைப் பிராமணர் அல்லாத வர் காதில் படுமாறு சொன்னால் சொல்லுபவர்க்கும் பாவம்; கேட்பவர்க்கும் பாவம்" என்னும் தடையைப் போக்குதற்கு ஒரு சூழ்ச்சி செய்தனர். (பார்ப்பன ரல்லாதாரிடம் இதைப் புகுத்தினால்தான் வருமானம் கிடைக்கும் என்பதே நோக்கம்)

"சடங்குக்குரியவர்களை முதலிற் பூணூல் போட்டுப் பிராமணர்களாக்கி விட்டுப் பிறகு, வடமொழி மந்திரங்களைச் சொல்வது" என்று முடிவு செய்தனர். இம் முடிவிற்கும் எதிர்ப்புத் தோன்றிற்று. "பூணூல் போடுவதால் மட்டும் ஒருவர் பிராமணர் ஆகிவிட மாட்டார்" என்று தடை எழுப்பினர். அத் தடையினை வெல்லும் முறையில் பிறிதொரு சூழ்ச்சி உருவாக்கப்பட்டது. திருமணக் காலத்திலே மாப்பிள்ளைக்குப் பூணூல் போட்டதும், அவர் காசிக்குச் சென்று வேதம் ஓதிவிட்டு வருவதாய்க் கருதி 'காசி யாத்திரை' என்னும் ஒரு சடங்கினை நுழைத்தனர். இவ்வாறாய்ப் புரோகிதர் வேலைக்கு ஏற்பட்ட தடங்கல்கள் மன்னனின் வல்லமையாலும், புரோகிதர்களின் சூழ்ச்சித் திறத்தாலும் வெல்லப் பட்டன.

மக்களுக்கு முதலிற் பிடிப்பு இல்லாமல் இருந்திருக்கலாம். கண்ணைக் கட்டிவிட்டதுபோல அயல்மொழியில் குருட்டுத்தனமாய்ப் புரோகிதர் சொல்லும் மந்திரங்களை உச்சரிக்க மாட்டாமல் தப்பும் தவறுமாய்ச் சொல்வதிலே அறிவுடை யவர்க்கு அருவருப்பு இருந்திருக்கும். என்றாலும் அரசர் ஆட்சி முறையின் பகுதியாதலின் இவ் வடமொழிச் சடங்குகளை மக்கள் வாய்மூடி ஏற்றுக் கொள்ள லாயினர். நானூறாண்டுகளாய் நாட்டில் நிலைத்து விட்ட இவ் வடமொழிச் சடங்குமுறை, சில ஆண்டு களாய்த்தான் ஆட்டங் காணத் தொடங்கி யிருக்கிறது. என்றாலும், பெங்களூரிலிருந்து திருநெல் வேலி வரை ஊருக்கொருவராய் அமர்ந்திருக்கும் புரோகிதர் இன்னமும் சடங்காட்சி செய்துதான் வருகின்றனர்.

**– 'என் வரலாறு' நூலிலிருந்து**

# பேராசிரியர் வீ. அரசு ஆய்வுரை (2)

# பெரியாரின் சுயமரியாதையும் வள்ளலாரின் ஜீவகாருண்யமும் ‘மனிதத்தை’யே பேசின

***சென்னை மாவட்டக் கழகம் சார்பாக, ‘வைதீகத்தை எதிர்த்த வள்ளலார்’ என்ற தலைப்பில், 22.10.2022 அன்று சென்னை, தேனாம்பேட்டை அன்பகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் “வள்ளலாரின் இறுதிப் பத்தாண்டுகள்” என்ற தலைப்பில் பேராசிரியர் வீ.அரசு ஆற்றிய உரை.***

***உரையில் இராமலிங்கனாரின் பிறப்பு முதல் அவர் சென்னைக்கு குடியேறி பிறகு சென்னையை விட்டு வெளியேறி சன்மார்க்க சங்கத்தை உருவாக்கியது வரை, வள்ளலாரின் இளமைக்கால வரலாறுகளில் தொடங்கி வள்ளலாரின் வைதீக எதிர்ப்பு எப்படி பரிணமித்தது என்பதை பேராசிரியர் விளக்குகிறார்.***

வள்ளலார் முதலில் பாசுரங்களைப் பாடி வந்தவராகவே இருந்திருக்கிறார். வள்ளலாருக்கு தாக்கத்தை ஏற்படுத்திய தமிழ் பக்தி மரபைச் சேர்ந்தவர்கள் என்று கூறினால், மாணிக்கவாசகர், திருமூலர், அருணகிரிநாதர், பட்டினத்தார், தாயுமானவர். இவர்கள் ஏற்படுத்தியது, தமிழ் பக்தி மரபுகளில் மிக முக்கியமான மரபு. இந்த மரபில் தான் வள்ளலார் ஊறியிருந்தார். இந்த மரபு சார்ந்து தான் பாடல்களை அவர் எழுதிக் கொண்டிருந்தார். சைவம் ரீதியாக அவர் தத்துவார்த்தமாக பேசவும், படிக்கவும் தொடங்குகிறார். வள்ளலாருக்கு முன்பே ஒரு சில பேர் சன்மார்க்க சங்கம் என்ற சொல்லைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். ’ஒழிவில் ஒடுக்கம்’ நூலில் கூட சன்மார்க்க சங்கம் என்ற சொல் புழக்கத்தில் வருகிறது. சன்மார்க்கம் என்றால் என்ன? என்ற சிந்தனைக்கு அவர் ஆட்படுத்தப்படுகிறார். வெறுமனே பாசுரங்களைப் பாடிக்கொண்டிருந்த இளைஞன் என்ற நிலையிலிருந்து பாசுரங்களுக்குப் பின்னே இருக்கக் கூடிய தத்துவார்த்த மரபுகளைப் பற்றியும் பேசுவதற்கு தனக்கான ஒரு வாய்ப்பை அவர் உருவாக்கிக் கொள்கிறார். அதனுடைய மிக முக்கியமான செயல்பாடாகத்தான் 1858 காலகட்டத்தில், சாஸ்திரச் சங்கம் சார்பில் ’மனு நீதி கண்ட வாசகம்’ என்று சொல்லக்கூடிய புத்தகத்தை அவரை எழுதச் சொல்கிறார்கள். மனுநீதி என்பது இந்திய வரலாற்றில் மிகுந்த, விரிந்த பொருளைக் கொண்டது. சோழ மன்னர்களை மனு என்ற சொல் கொண்டு அழைப்பார்கள். அந்த சொல் புழக்கத்தில் அதிகம் இருந்தது. மனுஸ்மிருதி வேறு, இங்கு மன்னர்களை மனு என்று பெயர் கொண்டு அழைப்பது என்பதும் வேறு. இந்த பின்புலத்தில் மன்னர்களைப் பற்றி எழுதச் சொல்கிறார்கள்.

சோழ அரசனின் மகன் தேரோட்டிச் சென்ற போது, ஒரு பசுவின் மீது மோதி அது உயிர் விட்டது. அதன் காரணமாக அந்த சோழ அரசன் தனது மகனையே பலி கொடுத்த கதை மனு நீதிச் சோழன். இப்படி தமிழ் மரபுகளில் இருப்பதை உரை நடை வடிவில் எழுதுவதற்கு சாஸ்திரச் சங்கம் அனுமதித்தது. அப்போது அவர் எழுதிய “மனுநீதி கண்ட வாசகம்” என்ற நூல் மிக மிக முக்கியமான நூல். அதில் உள்ள வாசகங்களை நாம் பார்த்தோமானால் 35 வயதில் வள்ளலார் எந்த மாதிரியான சிந்தனையில் இருந்துள்ளார் என்பது நமக்குத் தெரியவரும்.

“நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ!
வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தேனோ!
தானங் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ!
கலந்த சினேகரைக் கலகஞ் செய்தேனோ!
மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ் செய்தேனோ!
குடிவரி யுயர்த்திக் கொள்ளை கொண்டேனோ!
ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ!
தருமம் பாராது தண்டஞ் செய்தேனோ!
மண்ணோரம் பேசி வாழ்வழித்தேனோ!
உயிர்க்கொலை செய்வோர்க்க உபகாரஞ்
செய்தேனோ!
களவு செய்வோர்க்கு உளவு சொன்னேனோ!
பொருளை இச்சித்துப் பொய் சொன்னேனோ!
ஆசைகாட்டி மோசஞ் செய்தேனோ!
வரவுபோக் கொழிய வழியடைத்தேனோ!
வேலையிட்டுக் கூலி குறைத்தேனோ!
பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ!
இரப்போர்க்குப் பிச்சை இல்லையென்றேனோ!




கோள் சொல்லிக் குடும்பங் குலைத்தேனோ!
நட்டாற்றிற் கையை நழுவவிட்டேனோ!
கலங்கி யொளித்தோரைக்
காட்டிக்கொடுத்தேனோ!
கற்பழிந்தவளைக் கலந்திருந்தேனோ!
காவல் கொண்டிருந்த கன்னியை அழித்தேனோ!
கணவன்வழி நிற்போரைக் கற்பழித்தேனோ!
கருப்பமழித்துக் களித்திருந்தேனோ!
குருவை வணங்கக் கூசிநின்றேனோ!
குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ!
கற்றவர் தம்மைக் கடுகடுத்தேனோ!
பெரியோர் பாட்டிற் பிழைசொன்னேனோ!
பக்ஷியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனோ!
கன்றுக்குப் பாலூட்டாது கட்டிவைத்தேனோ!
ஊன்சுவை யுண்டு உடல் வளர்த்தேனோ!
கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ!
அன்புடையவர்க்குத் துன்பஞ் செய்தேனோ!
குடிக்கின்ற நீருள்ள குளந் தூர்த்தேனோ!
வெய்யிலுக் கொதுங்கும் விருக்ஷ மழித்தேனோ!
பகைகொண்டு அயலோர் பயிரழித்தேனோ!
பொதுமண்டபத்தைப் போயிடித்தேனோ!

- *அருட்பெருஞ்ஜோதி பாடலோடு வள்ளலாரின் கட்டுரைகளை மறைத்து விடுகிறார்கள்.*
- *அந்தக் கட்டுரைகளில் சமயத் தெய்வங் களையும், ஜாதி ஆச்சாரங்களையும் எதிர்த்தவர் வள்ளலார்.*

ஆலயக் கதவை அடைத்து வைத்தேனோ!
சிவனடியாரைச் சீறி வைதேனோ!
தவஞ் செய்வோரைத் தாழ்வு சொன்னேனோ!
சுத்த ஞானிகளைத் துஷணஞ் செய்தேனோ!
தந்தைதாய் மொழியைத் தள்ளி நடந்தேனோ!
தெய்வ மிகழ்ந்து செருக்கடைந்தேனோ!
என்ன பாவம் செய்தேனோ!
இன்னதென்றறியேனே !”

இப்படி அனைத்து விசயங்களைப் பற்றியான, உணர்வுப்பூர்வமான, ஆழமாக ஒரு மனிதராக அந்த காலகட்டத்தில் அவர் உருப்பெற்று விடுகிறார். இந்த பாடலில் ஒவ்வொன்றையும் எடுத்துப் பார்த்தோமானால் அப்போதைய காலனிய ஆட்சிக் காலத்தில் மக்கள் அடைந்த துன்பங்களை வைத்து தான் எழுதியிருப்பார்.

இப்படியான மனநிலையில் உருவான இராமலிங்கருக்கு சென்னை வாழ்வில் பிடிப்பில்லை. திருமண வாழ்வில் பிடிப்பில்லை. சென்னையில் வாழ்வதை ஏற்றுக் கொள்ளாத அவரது மனம் சென்னையை விட்டு கிளம்பிவிடுகிறார். தென்னாற்காடு மாவட்டம் என்று சொல்லக்கூடிய கருங்குழி என்ற ஊரிற்கு சென்று அங்கிருந்த புரவலர்களின் உதவியுடன் வாழ்ந்த செய்திகளெல்லாம் இருக்கிறது. அங்கு அவர் வாழ்ந்த காலத்திலிருந்து வேறு பல பரிமாணங்களும் உருவாகி வருகிறது. அதே போல 1858 காலம் தொடங்கி 1865 இந்த இடைப்பட்ட காலத்தில் “ஜீவ காருண்ய ஒழுக்கம்” என்ற நூலை எழுதினார். “கடவுள் அருளை ஜீவகாருண்ய ஒழுக்கத்தினால் பெறக்கூடுமல்லது, வேறு எந்த வழியானும் பெறக் கூடாதென்பது. எப்படியெனில் அருள் என்பது கடவுள் தயவு. கடவுளின் இயற்கை விளக்கம். சீவகாருண்யம் என்பது சீவர்களின் தயவு. சீவர்கள் ஆன்ம இயற்கை வாழ்வு கொண்டு வாழ்கிறவர்கள். கடவுளைப் பெறுவதற்கு சீவகாருண்யமே வழியானதனால், ஞான வழி என்பதும் சன்மார்க்கம் என்பதும் சீவகாருண்ய ஒழுக்கம் என்றும் அஞ்ஞான வழியென்பதும் துன்மார்க்கம் என்பதும் சீவகாருண்ய ஒழுக்கம் இல்லாமை என்றும் நான் கருதுகிறேன்” என்று கூறுகிறார்.

சீவகாருண்யம் என்றால் என்ன ? “மக்கள் மீது அன்பு” பட்டினி கிடக்கக்கூடிய மக்கள் மீதும் அது சார்ந்து வாழக்கூடிய மக்கள் மீதும் உள்ள அன்பைப் பற்றி அவர் இந்த சீவகாருண்ய உரை நடைப் பகுதியில் எழுதுகிறார். அந்த காலத்தில் உரை நடையில் எழுதுகிற மரபு கிடையாது. செய்யுள் மரபு தான் ஆதிக்கம் செலுத்திய காலம். உரைநடையை கொண்டு வந்தவர்கள் இரண்டு நபர்கள் தான். ஒன்று ஆறுமுக நாவலர் மற்றொருவர் வள்ளலார். இவர்கள் தான் இதைத் தொடங்கினார்கள். உரைநடையில் எழுதுவது என்பதே மிக முக்கியமான அரசியல். அனைத்து மக்களுக்கும் புரிந்து கொள்வதற்காகவும், சென்றடைவதற்காகவும் இந்த உரைநடையில் எழுதுவதை தொடங்குகிறார்கள்.

சீவகாருண்ய ஒழுக்கம் என்பது, “பசித்தவர்களுக்குப் பசியாற்றுவதையே விரதமாகக் கொண்ட சீவகாருண்யமுள்ள சம்சாரிகளுக்கு கோடையில் வெயிலும் வருத்தாது, மண்ணும் சூடு செய்யாது, பெரும் காற்று, பெரும் மழை, பெரும் பனி, பெரும் இடி, பெரு நெருப்பு முதலியவை துன்பம் செய்விக்க மாட்டா” இது தான் சீவகாருண்யம். பசித்தவர்களுக்கு யார் பசியாற்றுகிறார்களோ அவர்களை இந்த இயற்கை எந்த உபாதைகளும் செய்யாது என்கிறார். இப்படி பசி, பட்டினி, தயவு இதை மட்டுமே அவர் குறிக்கோளாகக் கொண்டுள்ளார்.

“சீவகாருண்ய ஒழுக்கமே சன்மார்க்கம். சீவகாருண்யம் விளங்கும் போது அறிவும், அன்பும் விளங்கும். அதனால் உபகார சக்தி விளங்கும். அந்த உபகார சக்தியால் எல்லா நல்ல காரியங்களும் தோன்றும். சீவகாருண்யம் மறையும் போது அறிவும், அன்பும் உடனாக நின்று மறையும். அதனால் உபகார சக்தி மறையும். உபகார சக்தி மறையவே எல்லா தீமைகளும் தோன்றும். ஆதலால் புண்ணியம் என்பது சீவகாருண்யம் ஒன்றே. பாவம் என்பது சீவகாருண்யம் இல்லாமல் இருப்பது ஒன்றே என்றும் அறியுங்கள். சீவகாருண்யத்தால் வரும் விளக்கம் மட்டுமே கடவுள் விளக்கம் என்றும் அதனால் வரும் இன்பமே கடவுள் இன்பம் என்று அறிக”. ஜீவகாருண்யம் என்பது ஒரு சமஸ்கிருத சொல். இதை எப்படி நாம் எப்படி புரிந்து கொள்ள வேண்டுமானால், அருகில் உள்ள மனிதர்கள் மீது அன்பு கொள்வது அவர்களுக்குப் பசிப்பிணி இருந்தால் போக்குவது இது தான் ஜீவகாருண்யம். இது தான் கடவுள் வழிபாடு என்கிறார். இதுதான் சன்மார்க்கம் என்கிறார்.

இந்திய தத்துவ மரபில், ஞானிகள் என்று கூறப்படுபவர்களில் யாரவது ஒருவர் இப்படி பசியைப் போக்க வேண்டும் என்று பேசியிருக்கிறார்களா ? பெரியார் எப்படி ’சுயமரியாதை’ என்ற மிகப்பெரிய விசயத்தைக் கண்டுபிடித்தாரோ, அதைப்போலவே வள்ளலார் மனிதர்களுக்கு உதவக்கூடிய ஜீவகாருண்யமே வாழ்க்கை என்று கண்டுபிடித்தவர். அது சார்ந்தே தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர். 1865 தொடக்கத்திலிருந்து அவர் மறைகிற 1874 என்ற ஒன்பது ஆண்டுகளில் அவருடைய செயல்பாடுகள் என்பது இவர் பேசிய ஜீவகாருண்யம் சார்ந்த செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான அமைப்புக்களை உருவாக்குகிறார். அந்த காலகட்டங்களில் இங்கு மிகக் கொடுமையான பஞ்சம் இருந்தது. 19 ஆம் நூற்றாண்டில் 5 முறை பஞ்சம் வந்திருக்கிறது. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் இறந்துள்ளனர். இவற்றை வள்ளலார் தன் கண்ணால் கண்டவர். அந்த மக்களின் கொடுமைகளைப் புரிந்தவர்.

அவர் உபதேசக் குறிப்புகளில் சன்மார்க்கம் என்றால் என்ன? என்பதைப் பற்றி அவர் சொல்கிறார். ‘சர்வ சித்தி’ உடைய தனித் தலைமைப் பதவி உடைய ஆண்டவரை வேண்டி, தபசு செய்து,

சிருஷ்டிக்குள் சித்தியைப் பெற்றுக் கொண்டவன் பிரம்மன். சிருட்டி, திதி ஆகிய திதிகளைப் பெற்றவன் விஷ்ணு. சிருட்டி, திதி, சங்காரம் ஆகிய சித்தியைப் பெற்றுக் கொண்டவன் ருத்ரன். இவர்கள் ஏற்படுத்திய சமய மார்க்கங்களை அனுஷ்டிக்கிறவர்கள் இவர்களை அந்தந்த சமயங்களுக்கு தெய்வங்களாக வணங்கி வழிபாடு செய்து வந்தார்கள். இம்மூர்த்திகளின் தேசம் ஏகதேசம் கூட அல்ல.

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ஈரோடு வடக்கு மாவட்டக் கழகத்தின் "இல்லம் தேடி சந்திப்பு"



திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோடு வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்ட கலந்துரையாடல் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி தோழர்களின் 'இல்லம் தேடி சந்திப்பு' நிகழ்வின் முதல் நிகழ்வாக 30.10.2022 ஞாயிறு அன்று, கவுந்தாபாடி இளமதி செல்வம் வீட்டிற்கு தோழர்கள் சென்றனர். தோழர்களின் இல்லத்தில் அவர்களது குடுபத்தினரோடு கலந்துரையாடல் நடைபெற்றது . அந்த பகுதியில் அமைப்பை கட்டமைப்பது, தோழர்களுக்கு அவர்களது வாழ்வியலில் பகுதியில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது. அனைவருக்கும் அசைவ விருந்தினை தோழர் செல்வம் குடுபத்தினர் சிறப்பாக ஏற்பாடு செய்து இருந்தனர்.

இரண்டாவது வார நிகழ்வாக 6.11.2022 அன்று அந்தியூர் தமிழ்நாடு அறிவியல் மன்றப் பொறுப்பாளர் வீரா கார்த்திக் இல்லம் சென்றனர். தோழரின் குடும்ப அறிமுகத்திற்குப் பின் அவர்களின் பணியிடங்களில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து, வருகின்ற மார்ச் அல்லது ஏப்ரல் முதல் வாரத்தில் ஒருங்கிணைந்த குடும்ப விழா நடத்துவது குறித்தும் கலந்துரையாடல் நடைபெறறது. கலந்து கொண்ட அனைவருக்கும் வீரா கார்த்திக் மற்றும் அவரது இணையர் சிறப்பான அசைவ விருந்தை ஏற்பாடு செய்து இருந்தனர்.

மூன்றாவது வார நிகழ்வாக 20.11.2022 காசிபாளையம் தோழர்களின் ஒருங்கிணைப்பில் காசிபாளையம் கிளை கழகத் தோழர்களின் சந்திப்பு மற்றும் இம்மாதத்திற்கான மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் காசிபளையம் கருப்பணன் இல்லத்தில் நடைபெற்றது. கலந்துரையாடல் கூட்டத்தில் நவம்பர் 26 சாதி ஒழிப்பு மாவீரர்கள் நாளை கோபி பெரியார் சிலை முன் சிறப்பாக நடத்துவது எனவும், நவம்பர் 27இல் கொளத்தூர் நிகழ்வில் பங்கெடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. வருகின்ற டிசம்பர் 24 பெரியார் நினைவு நாள் கருத்தரங்கம் சத்தியில் நடத்துவது எனவும், மாவட்ட கழகத் தோழர்களுக்கு விரைவில் இணையதள பயிற்சி நடத்துவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நிகழ்வில் கொளப்பலூர் போக்குவரத்து நகரில் தோழர் ராம் கழகத்தில் புதிதாக இணைத்து கொண்டார். அனைவருக்கு காசிபாளையம் தோழர்கள் அசைவ உணவு ஏற்பாடு செய்து இருந்தனர்.

**செய்தி: ம.நிவாசு**

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகையால் இவர்கள் அந்த சர்வ சித்தி உடைய கடவுளுக்கு ஒப்பாவார்கள். கோடி கோடிப் பங்கு தாழ்ந்த தரத்தில் இருக்கிறார்கள். ஆகையால் சமயத் தெய்வங்களை வழிபாடு செய்து அந்த சமயத் தெய்வங்களைப் பெற்றுக் கொண்ட அற்ப சித்தியில் அவர்கள் மயங்கி மகிழ்ந்து அகங்கரித்து மேலேறவேண்டிய படிகளெல்லாம் ஏறி பூரண சித்தியை அடையாமல் தடைபட்டு நிற்றல் நில்லாமல் சர்வ சித்தி உடைய கடவுள் ஒருவர் உண்டென்றும், அவரை உண்மையின் பால் வழிபாடு செய்து பூரண சித்தியைப் பெற வேண்டும் என்றும் கொள்ள வேண்டுவதே சன்மார்க்க சங்கத்தினுடைய கோட்பாடு" என்று அவர் கூறுகிறார். அதாவது இங்கு இருக்கிற அனைத்து சமயங்களும் சரியில்லை. அதைத் தவிர்த்து ஜீவகாருண்யத்தை பேச வேண்டும் என்கிறார். மற்றொரு வரியில், "தத்துவ ஒழுக்கங்கள் பற்றி சமயங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தொழில் ஒழுக்கங்கள் பற்றி ஜாதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தயவை விருத்தி செய்வதற்கு தடையாக இருப்பன. சமய ஏற்பாடு, ஜாதி ஏற்பாடு முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள்" பசி போக்குவதற்கும், கருணைக்கும் தடையாக இருப்பது சமயங்களும், ஜாதியும் தான் என்கிறார் வள்ளலார்.

கட்டுப்பாட்டு ஆசாரங்கள் என்றால் என்ன ? பட்டியலிடுகிறார் வள்ளலார், 'ஜாதி ஆசாரம், குலாசாரம், ஆசிரம ஆசாரம், லோகாசாரம், தேசாசாரம், கிரியாசாரம், சமயாசாரம், மதாசாரம், மரபாசாரம், கலாச்சாரம், சாதனாசாரம், சாத்திரசாரம் முதலிய ஆசாரங்கள் அதனால் மேற்குறித்த ஆசாரங்கள் ஒழிந்து சுத்த சிவஞான ஆசாரத்தை வழங்கி பொது நோக்கம் வந்தால் மேற்படி காருண்ய விருத்தியாகி கடவுள் அருளைப் பெற்று அனந்த சித்தி முத்திகளைப் பெறக்கூடுமே அல்லாது இல்லாவிடில் கூடாது" அந்த காலத்தில் சமூகத்தில் இருந்த ஜாதி, சமயம், கலாச்சாரம் ஆகிய அனைத்தும் மனித கருணைக்கு எதிரானதாக கூறுகிறார். அவர் கடவுளை அடைய வேண்டும் என்றால் இந்த அனைத்தையும் ஒழிக்க வேண்டும் என்கிறார்.

வள்ளலார் பாசுரங்களைப் பாடும் போது வேறுமாதிரியாகவும், கட்டுரைகள் எழுதும் போது வேறாகவும் எழுதுகிறார். கட்டுரைகளில் ஜாதி, சமயங்களை முற்றிலும் எதிர்த்தே எழுதுகிறார். ஆனால் இங்கோ, வள்ளலாரின் பாடல்கள் மட்டும் தான் பாடப்படுகிறது. கட்டுரைகளை யாரும் கூறுவதேயில்லை. அருட்பெருஞ்ஜோதி, அருட்பெரும்ஜோதி என்று பாடல்களை மட்டும் பாடிவிட்டு வள்ளலாரின் ஜாதி எதிர்ப்பு, சமய எதிர்ப்புக்களை யாரும் பதிவு செய்வதில்லை. ஆனால் நாம் வள்ளலாரின் கட்டுரைகளைப் படித்து, வள்ளலார் ஜாதிக்கு எதிராகவும், சமயங்களுக்கு எதிராகவும் பேசியதை மக்களிடம் பரப்புவோம்.

(நிறைவு)

# 10% இட ஒதுக்கீட்டைக் கண்டித்து கடலூரில் ஆர்ப்பாட்டம்




கடலூர் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், 15.10.2022, அன்று காலை 10 மணியளவில், கடலூர் மஞ்ச குப்பம் தலைமை தபால் நிலையம் அருகில், "உச்சநீதிமன்றத்தின் மற்றொரு அயோத்தி தீர்ப்பு" என்ற தலைப்பில் உயர்சாதி பிரிவினருக்கு வழங்கிய 10% இடஒதுக்கீட்டை கண்டித்தும், ஒன்றிய அரசு ரத்து செய்ய வலியுறுத்தியும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சனாதனத்தின் குரலாக உச்சநீதிமன்ற தீர்ப்பு, பொருளாதர அளவுகோல் இடஒதுக்கீட்டுக்கு பொருந்தாது, 10% இடஒதுக்கீடு, இடஒதுக்கீட்டு முறையையே சீர்குலைக்கும், சமூகநீதியை சீர்குலைக்கும் உச்சநீதிமன்ற தீர்ப்பு ஆகிய முழக்கங்களை முன்னிறுத்தி கண்டன முழக்கமிடப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் தொடக்க நிகழ்வாக விடுதலைக் குரல் கலைக்குழுவினர் கொள்கை பிரச்சார பாடல்களை பாடினர்.

ஆர்ப்பாட்டத்திற்கு திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாவட்ட செயலாளர், ர.சிவகுமார் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர், அ.மதன்குமார் வரவேற்று நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

ஆ.சதிசு - மாவட்ட அமைப்பாளர், சிவா - இளைஞரணி மாவட்ட அமைப்பாளர், பிரேம் - தமிழ்நாடு மாணவர்க் கழக மாவட்ட அமைப்பாளர், ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து, கமல் - விசிக, ராம்குமார் - தலித் மக்கள் பாதுகாப்பு இயக்கம், பிரகாஷ் - தலித் மக்கள் பாதுகாப்பு இயக்கம், தங்க சேகர் - தமிழ் மீனவர் விடுதலை வேங்கை, விஜி பகுத்தறிவு - தமிழக வாழ்வுரிமைக் கட்சி, கார்த்திகேயன் - விடுதலைக் குரல் கலைக்குழு, ரவி - மக்கள் அதிகாரம், தென். சிவகுமார் -திராவிடர் கழகம், அறிவழகன் - மாவட்ட அமைப்பாளர், தமிழ்நாடு அறிவியல் மன்றம், பூ.ஆ. இளையரசன் - மாவட்டத் தலைவர் விழுப்புரம் திராவிடர் விடுதலைக் கழகம் ஆகியோர் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர்.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில அமைப்புச் செயலாளர் - தி.ச. திருமார்பன், பெரியாரிய சிந்தனையாளர் வழக்கறிஞர் - வீ.அழகரசன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் செயலாளர் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இள. புகழேந்தி ஆகியோரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கண்டன உரை யாற்றினர். இறுதியாக முத்துகிருஷ்ணன் நன்றி கூறினார்.

# வரதம்மாள் படத்திறப்பு நிகழ்வு



சென்னை மாவட்டக் கழகத்தின் வட சென்னை மாவட்ட அமைப்பாளர் தட்சிணாமூர்த்தி தாயார் வரதம்மாள் கடந்த 28.10.2022 அன்று முடிவெய்தினார். வரதம்மாள் படத் திறப்பு நிகழ்வு 20.11.2022 அன்று மாலை 6:30 மணியளவில் சேத்துப்பட்டு தட்சிணாமூர்த்தி இல்லத்தில் நடைபெற்றது.

தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் படத்தை திறந்து வைத்து நினைவேந்தல் உரையாற்றினார். சென்னை மாவட்ட செயலாளர் இரா.உமாபதி நிகழ்வை ஒருங்கிணைத்தார். தொடர்ந்து, தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார், திமுக மாவட்ட பிரதிநிதி மாதவன், அம்பேத்வளவன் - விசிக மேற்கு மாவட்ட செயலாளர், சேத்துப்பட்டு இராசேந்திரன் உள்ளிட்டோர் நினைவேந்தல் உரையாற்றினர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்" ஆண்டுக்கட்டணம் ரூ.300
தொடர்புக்கு : ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 24th November 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN